ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2422/16 - 2025 පෙබරවාරි මස 04 වැනි අඟහරුවාදා - 2025.02.04

2422/16 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டம்

**5 ஆம் பிரிவின் கீழான நோய்தொற்றிய பகுதிகள் பிரகடனமும் அதனோடிணைந்த ஏற்பாடுகளும்**

2024.11.04 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2409/02 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான நோய்தொற்றிய பகுதிகள் பிரகடனமும் அதனோடிணைந்த ஏற்பாடுகளும் அந்த வார்த்தமானப் பத்திரிகையில் அடங்கியுள்ள தொற்றுநோய்கள் பற்றிய பிரகடனம் மாற்றம் செய்யப்பட்டு இத்தால் வெளியிடப்படுகிறது.

1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் பட்டியல் படுத்தப்பட்ட நோய்களுள் ஒன்றான ஆபிரிக்கா பன்றிக்காய்ச்சல் African Swine Fever (ASF) எனும் விலங்குநோய் மற்றும் 2014 யூலை மாதம் 17 ஆந் திகதிய 1867/8 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பன்றி இனப்பெருக்க சுவாசப்பை நோய் Porcine Reproductive respiratory Syndrome (PRRS) இலங்கையில் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதால், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கஸ்தூரி ஆராச்சிகே சந்திரிகா ஹேமமாலி அபேரத்ன கொத்தலாவல ஆகிய நான்,1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்குநோய்கள் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் எனக்கு உரிதாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இலங்கையின் பிரதேசசெயலாளர் பிரிவுகள் அனைத்தும் விலங்குநோய்கள் சட்டத்தின் செயற்பாடுகளின் பொருட்டு நோய் தொற்றிய பிரதேசங்களாகவும்

(1) பன்றிகள் (Sus Scrofa) நோய்தொற்றத்தக்க விலங்கினமாகவும் இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

(3) இக்கட்டளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டும் எனவும், முன்னதாக நீக்கப்பட்டால் அல்லது இக்கட்டளையின் செல்லுபடிக்காலம் மேற்குறிப்பட்ட சட்டத்தின் 5(3)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக மேலும் நீடிக்கப்பட்டாலாழிய, இக்கட்டளை அமுலுக்கு வரும் தினத்திலிருந்து மூன்று (03) மாதங்களுக்குச் செல்லுபடியானதாகல் வேண்டும் எனவும் இத்தால் கட்டளை பிறப்பிக்கிறேன். நோய்நிலைமைகளுக்கு அமைவாக காலத்தினை நீடிக்கும் இயலுமை உள்ளது.

02. இக்கட்டளையானது அமுலில் இருக்கும் வரையிலான காலப்பகுதியில், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகிய நான்-

( 1 ) குறிப்பிட்ட பன்றி இனப்பெருக்க சுவாசப்பை நோயினை (PRRS) நோய் மற்றும் ஆபிரிக்க பன்றி காய்ச்சல் (ASF) தொற்றிய பிரதேசங்களுள் மட்டுப்படுத்தி, வேறிடங்களுக்கு பரவாமால் தடுக்கும் பொருட்டு நோய் தொற்றிய பிரதேசங்களில் கீழ் குறிப்பிட்ட நடவடிக்கைகளை இத்தால் தடை செய்கிறேன்.

(அ) நோய் தொற்றிய பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்துக்கு பொறுப்பான அரச கால்நடை வைத்தியரினால் விலங்கு நோய்ச்சட்டத்தின் 5(4)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமின்றி, அப்பிரதேசத்திலிருந்து நோய்தொற்றத்தக்க விலங்கினங்கள், அகற்றுதல்; வாகனங்களில் எடுத்துச்செல்லல், பற்றிச்செல்லுதல், நடத்திச்செல்லுதல், இறைச்சிக்காக கொல்லுதல், விலங்கு உற்பத்திப் பொருட்கள், நோய்த்தாக்கம் கொண்ட ஆபத்தான பொருட்கள் மற்றும் நோய்த் தாக்கம் கொண்ட பொருட்கள் ஆகியவற்றினை வெளியிடங்களுக்கு கொண்டு செல்லுதல்;

(ஆ) நோய் தொற்றத்தக்க விலங்குகளை இறைச்சிகாக கொல்லுதல், (நோய் தொற்றாமை பற்றி பரீட்சித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும்);

(இ) பன்றி இறைச்சி தயாரிக்கும்/பதப்படுத்தும் நிலையங்கள் கால்நடை /விலங்கு உடல்நல சான்றிதழ்களை வைத்திருக்க வேண்டும்;

(ஈ) நோய் தொற்றத்தக்க விலங்கினங்கள் சம்பந்தப்பட்டவாறான உயிர்விலங்கு சந்தைகள், கண்காட்சிகள், போட்டி நிகழ்ச்சிகள் நடத்துதல்;

(உ) இக்கட்டளையில் குறிப்பிட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுள் ஒருவரின் அனுமதிப்பத்திரம் இல்லாது, நோய் தொற்றத்தக்க விலங்கினங்களை அல்லது அவற்றின் உற்பத்திப்பொருட்களை, நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் விற்றல், விற்பனைக்கு காட்சிப்படுத்தல் விற்பனைக்கு விடுதல், விநியோகித்தல் அல்லது பகிர்ந்தளித்தல்;

(ஊ) இறக்கும் தறுவாயில் ஆபிரிக்காவின் பன்றிக் காய்ச்சல் (ASF) நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டதாக சந்தேகப்படத்தக்க இறந்த விலங்குகளின் சடலத்தினை அல்லது அதன் ஏதேனும் ஒரு பாகத்தினையோ அல்லது வேறு நோய்த்தாக்கம் கொண்ட ஆபத்தான பொருட்கள் மற்றும் நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் ஆகியவற்றினை குளங்கள், ஆறுகள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்குள் எறிதல் அல்லது போடுதல்;

(எ) இறக்கும் தறுவாயில் ஆபிரிக்காவின் பன்றிக் காய்ச்சல் (ASF)நோயினால் பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்டதாக சநதேகப்படத்தக்க இறந்த விலங்குகளின் சடலத்தினையோ அல்லது அதன் ஏதேனும் ஒரு பாகத்தினையோ அல்லது வேறு நோய்த்தாக்கம் கொண்ட ஆபத்தான பொருட்கள் மற்றும் நோய்த்தாக்கம் கொண்ட பொருட்கள் ஆகியவற்றினை வேறு விலங்குகள் அல்லது பறவைகள் காவிச்செல்லுமாறு வைத்தல் அல்லது போடுதல்;

(ஏ) இக்கட்டளையில் குறிப்பிட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுள் ஒருவரின் அனுமதிப்பத்திரம் இல்லாது எந்த ஒரு கொல்களத்திலும் பன்றிகள் இறைச்சிக்காக கொல்லப்படலாகாது.

(3) நோய் தொற்றாத இனவிருத்திபண்ணைகளில் உள்ள பன்றிகள்/ விலங்குகள் இனவிருத்தி மற்றும் விற்பனை சம்பந்தமாக பின்வரும் காரணங்கள் சம்பந்தமாக கருத்தில் கொண்டு அனுமதி தரப்படலாம்.

I இனவிருத்திபண்ணைகள்: கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் விலங்கு இனவிருத்திப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட இனவிருத்திப் பண்ணைகளாக இருத்தல்

II இனவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தவுள்ள சகல விலங்குகளும் மற்றும் இறைச்சிக்காக வளர்க்கும் விலங்குகளும் குறித்தநோய் தொற்றாதவை என அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுள் ஒருவரினால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

III வர்த்தக நோக்கில் வழங்கப்படும் குட்டிகளுக்கு மேலே II இல் குறிப்பிட்டவாறு உறுதிசெய்யப்பட வேண்டும்.

IV விலங்குகள் புதிதாக சேர்க்கும் நோக்கத்தில் உள்ள வர்த்தக நோக்கு பண்ணையாயின், கிருமிகள் தொற்று நீக்கப்பட்டு இருப்பது அவசியமாகையால் கிருமியழித்தல் நடவடிக்கைகள் செய்யப்பட்டிருப்பது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுள் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

V பெற்றுக்கொண்ட/வாங்கப்பட்ட சகல விலங்குகளுக்காக வழங்கப்பட்ட போக்குவரத்துக்கான கால்நடை சுகாதார அத்தாட்சிப்பத்திரம் எப்போதும் பண்ணையில் வைத்திருத்தல் அவசியம்.

இச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கு அமைய தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளை தடுக்கும் பொருட்டு அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக அச்சட்டத்தின் 13 ஆம் பிரிவில்பிகுறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்துவதற்குப் பொறுப்பாக கீழே குறிப்பிட்ட அலுவலர்களை பிரேரிக்கிறேன்.

1. பணிப்பாளர்(கால்நடை சுகாதாரம்) கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்
2. பணிப்பாளர்(வனவிலங்கு சுகாதாரம்) வனவிலங்கு பாதுகாப்புத்திணைக்களம்
3. சகல பிரதான கால்நடை வைத்தியர்கள் மாநகரசபை/கள்
4. பிரதிப்பணிப்பாளர்(கால்நடை சுகாதாரம்) கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்
5. சகல மாகாணப்பணிப்பாளர்கள் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்
6. விடயங்கள் தொடர்பான நிபுணத்துவ அலுவலர்கள் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்.
7. மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதிப்பணிப்பாளர் மற்றும் சகல மாவட்ட கால்நடை வைத்தியர்கள்

8. மாவட்டத்துக்குப் பொறுப்பான புலனாய்வு உத்தியோகத்தர்கள் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்

9. சகல பிரதேசங்களுக்கு பொறுப்பான அரச கால்நடை வைத்தியர்கள்

10. சகல கால்நடை வைத்தியர்கள் மாநகரசபை/கள்

11. சகல வனவிலங்கு கால்நடை வைத்தியர்கள்

உற்பத்தித் திணைக்களம்

கலாநிதி (திருமதி) கஸ்தூரி ஆராச்சிகே சந்திரிகா
ஹேமமாலி அபேரத்ன கொத்தலாவல
பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தித் திணைக்களம்,
கற்றம்பே, பேராதனை
2025,பெப்புருவரி 04.

EOG 02– 0029

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.